<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>O.S.No. 241 /2022</u>

25.07.2025 பி.வா.சா.1 திரு. சீனிவாசன்

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ., பிஎட் படித்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்து என் தம்பி மணிகண்டனுக்கு மட்டும் பாத்தியம் என்று ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார். வாதி என் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். தாவா சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் எனது தந்தையின் சுய சம்பாத்திய சொத்து.
2. என் தந்தை கடந்த 28.05.2013ம் தேதி பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றும் அது எனக்கு எப்போது தெரியும் என்றால் 29.04.2022ம் தேதிக்கு பின்னர் எனக்கு தெரிய வந்தது. வாசாஆ 3 ஆன உயில் ஆவணம் இரண்டு சொத்துகளை பொறுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தில் 1–வது தபசில் சொத்தை பொறுத்து எனக்கும் மற்றும் என் உடன் பிறந்த 3 நபர்களுக்கும் சேர்த்து தான் எனது தந்தை எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.
3. உயில் ஆவணத்தில் 2–வது தபசிலாக காட்டப்பட்டுள்ளது வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் எனக்கு உயிலை பற்றி தெரியாது. நான் தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால் சங்கர் நகர், திருநெல்வேலியில் வசிக்கிறேன். எனது தந்தை இறந்த அன்று நான் மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து தபசில் சொத்தை பொறுத்து நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல எனது தந்தைக்கு இறுதி சடங்கை செய்யவிடாமல் தடுத்தார்கள் அதனால் தான் பிரச்சனை. வாதி என் மீது, மற்ற பிரதிவாதிகள் மீது வாதி காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தார் என்றால் என் அப்பா இறந்த அன்று இறுதி சடங்கு நிகழ்வுகளில் நான் கலந்து கொள்ள கூடாது என சொல்லி பிரச்சனை செய்தார்கள் அதை கேட்ட போது எனக்கு முன்பாக காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார். தாவா இடத்தில் இருந்து என்னை அப்புறப்படுத்த வேண்டும் என்று போலீசை வைத்து மிரட்டினார்.

4. நான் வாதி மீது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது தந்தை எழுதி வைத்த உயில் ஊர்ஜிதத்திற்கு எப்போது வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனது தந்தை இறந்த பிறகு இந்த வழக்கு வாதி தாக்கல் செய்த போது தான் தெரியும். வாதி தாவா சொத்து சம்பந்தமாக வரி செலுத்துவதற்கு மாநகராட்சிக்கு மனு கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி அவர் பெயரில் தாவா சொத்திற்கு வரி செலுத்தி வருகிறார் என்று சொன்னால் தெரியாது.

5. தாவா சொத்து எந்த இடத்தில் அமைந்துள்ளது என்றால் கங்கை அம்மன் கோவில் தெரு, தளவாய்புரம், தச்சநல்லூரில் உள்ளது. தாவா சொத்தில் தற்போது யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது என் தந்தை இறந்த பிறகு அந்த இடத்திற்கு நான் சென்றதே இல்லை. எனது தந்தை எழுதி வைத்த உயிலில் வாசா.2 ராமமூர்த்தி என்பவர் கையொப்பம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. எனது தந்தை சுய நினைவுடன் தான் உயிலை தயார் செய்துள்ளார் என்றும் நான் அதற்கு விரோதமாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா சுயநினைவுடன் எழுதவில்லை. அவரை கட்டாயபடுத்தி மோசடியாக எனது தாயார் இறந்த பின்னர் அவரை இரண்டு ஆண்டுகள் கொடுமை செய்து எழுதப்பட்டுள்ளது. உயிலானது மோசடியாக தயார் செய்யப்பட்டது என்பது சம்பந்தமாக நான் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை.

7. எனது தந்தை எனக்கு கொடுக்க வேண்டிய சொத்துகளை கொடுத்துள்ளார் என்றும் தாவா சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/- R.M. Marimuthu)

Principal District Munsif,
Tirunelveli.